விலை: சதம் 60

# ஈழநாடு
THE EELANADU

மலர் 23 ஆனி 4 ஷஃபான் 15 இதழ் 124

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 18-6-1981

நியூ கேம்பிறிட்ஜ்
திருநெல்வேலிச் சந்தி
20-6-81-ல் ஆரம்பம் [83/82]
இரசாயனம்- அன்ரன் மாஸ்ரர்
பௌதிகம்- சிறிஸ்கந்தராஜா
தாவரவியல்-சிவவீரசிங்கம்
விலங்கியல்-ஜெகானந்தகுரு
1-7-81 ல் ஆரம்பம்
Spoken English
-By முத்துலிங்கம்
Radio & Electronic
Tele Communication
Lond. Exam.
Special English Classes for all Grades

## தேர்தல் ஆட்சேபமனு
### காங்கிரஸ் ஆலோசனை

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபை தேர்தல் ஆட்சேப மனு ஒன்றைத் தாக்கல்செய்வது தொடர்பாக தமிழ்க்காங்கிரஸ் செயற்குழு இம்மாதம் 20ம் திகதி ஆராயவுள்ளதாக கட்சிப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

செயற்குழுக் கூட்டத்தில் கட்சி தீர்மானித்தாலும்கூட யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபை கூடியபின்னரே இம்மனு தாக்கல் செய்யப்படும் என்றும் அப்பிரமுகர்தெரிவித்தார். [கு]

# கூட்டணி - தமிழ்க் காங்கிரஸ்
# விரைவில் இணையும்?

## அரசியல் வட்டார ஹேஷ்யம்

(யாழ்ப்பாணம்)

நடந்துமுடிந்த மாவட்ட அபிவிருத்திச்சபைத் தேர்தல்கள் தமிழ் மக்கள் மத்தியில் ஒற்றுமை ஏற்படுவதையே வலியுறுத்திக் காட்டுவதாக அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

தமிழ் மக்களிடையே இந்த ஒற்றுமையை மேலும் வலுப்படுத்தும்வகையில் தமிழர் விடுதலைக் கூட்டணியும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியும் விரைவில இணையலாம் என்றும் அரசியல் வட்டாரங்கள் ஹேஷ்யம் தெரிவித்துள்ளன.

இந்த இரு கட்சிகளுமே இணையவேண்டுமென்பதைஇரு கட்சிகளிலுமுள்ளவர்களுமே தத்தம் கட்சிகளை வற்புறுத்தி வருவதாகவும் இரு கட்சிகளும் இணையும் சாத்தியக்கூறுகள் தோன்றியுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாணத்தில் வன்முறைச்சம்பவங்கள் நடைபெற்றுக்கொண்டிருந்த போது கூட்டணித் தலைவர் திரு. மு. சிவசிதம்பரமும், காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு. குமார் பொன்னம்பலமும் கூட்டாக அறிக்கை வெளியிட்ட போதே, இந்த இரு கட்சிகளுமே இணையவேண்டும் என்ற கருத்துத் தோன்றிய போதிலும் தேர்தல் முடிவுகள் மேலும் வலுப்படுத்தியிருப்பதாகவும் கூறப்படுகிறது.

இக்கட்சிகளை இணைக்கும் முயற்சியில் இரு கட்சிகளின் உயர்மட்டத்தைச் சேர்ந்த சிலர் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் தெரியவருகிறது. [கு]

## இவர்களும் ஆதரவு!

[யாழ்ப்பாணம்]

தமிழர் விடுதலைக் கூட்டணியும் தமிழ்க்காங்கிரஸ் கட்சியும் இணையவேண்டுமென்பதை யாழ். மாநகர சபையின் காங்கிரஸ் உறுப்பினர்கள் சிலர் விரும்புவதாகத் தெரிகிறது.

இம்மாதம் இருபதாம் திகதி நடைபெறவுள்ள காங்கிரஸ் செயற்குழுக் கூட்டத்தில் இந்த எம்.எம்.சிக்கள் இதனை வலியுறுத்தியுள்ளதாகவும் தெரியவருகிறது. (கு)

## ஜனாதிபதி ஆணைக்குழு

[கொழும்பு]

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கு ஜனாதிபதி ஆணை குழு ஒன்று நியமிக்கப்படுமென்று அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

சர்வதேச மனிப்புச்சபை அல்லது சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழு போன்ற ஒன்றே யாழ் சம்பவங்கள் பற்றி விசாரணை நடத்தவேண்டுமென்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் கோரிக்கையை அரசு ஏற்றுக்கொள்ளமாட்டாது என்றும் இவ்வட்டாரங்களில் பேசப்படுகிறது.

அரசாங்கம் நியமிக்கும் ஆணைக்குழுவில் மூவர் அங்கம் வகிப்பார்கள் என்பதும் இவர்கள் சிங்கள, தமிழ், முஸ்லிம் அல்லது பறங்கி இனத்தவ

[6-ம் பக்கம் பார்க்க)

## பிறப்பு விகிதம் 1000க்கு 28 பேர்!

(கொழும்பு)

இலங்கையில் தற்போது பிறப்பு விகிதம் 1000க்கு 28 பேர் என்று புள்ளி விபரம் ஒன்று தெரிவிக்கின்றது.

இறப்பு விகிதம் 1000க்கு ஆறாக உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ]

## "யாழ். தேர்தல் முடிவுகள்
# விடுதலைக்கு தமிழ்மக்களின் ஆதரவைக் காட்டுகிறது"

### மானிப்பாய் எம். பி. கருத்து
### 'நடா'வுக்கு மல்லாகத்தில் வரவேற்பு

[மல்லாகம்]

'யாழ் மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி அமோக வெற்றியீட்டியது தமிழ் மக்கள் விடுதலைப் போருக்கு அளிக்கும் ஆதரவைக் காட்டுகிறது.'

இவ்வாறு யாழ் மாவட்ட அபிவிருத்திசபைத் தேர்தலில் வெற்றியீட்டிய தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ் மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் சட்டத்தரணி எஸ். நடராசாவுக்கு மல்லாகத்திலுள்ள அவரது இல்லத்தில் அளிக்கப்பட்ட வரவேற்புக்கூட்டத்தில் மானிப்பாய் எம்.பி. திரு. வி. தர்மலிங்கம் பேசுகையில் கூறினார்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் கச்சேரியில் யாழ். மாவட்ட அபிவிருத்திசபைத் தேர்தல்முடிவுகள் வெளியிடப்பட்டதைத் தொடர்ந்து யாழ். மாவட்ட அபிவிருத்திசபைத் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்ட சட்டத்தரணி எஸ். நடராசா மல்லாகம் பழம் பிள்ளையார் கோவில் முன்றலிலிருந்து அவரது இல்லத்துக்கு ஆதரவாளர்களாலும் பொது மக்களாலும் ஊர்வலமாக மாலைகள் சூட்டப்பட்டு, மேளவாத்தியம் சகிதம் அழைத்துச் செல்லப்பட்டார். மல்லாகத்திலுள்ள வர்த்தகர்கள், விடுகள் வாசல்களில் பூரணகும்பம் வைத்து மலர்மாலை சூட்டி வரவேற்றனர்.

பின்பு திரு. நடராசாவின் இல்லத்தில் மல்லாகம் கூட்டணிக் கிளைத்தலைவர் டாக்டர். வே தாடரணிய தலைமையில் நடைபெற்ற இவ்வரவேற்புக் கூட்டத்தில் மானிப்பாய் எம். பி திரு. தர்மலிங்கம் தொடர்ந்து பேசுகையில் "தமிழ் மக்கள் சுதந்திரமாக வாழ்வதையே விரும்புகிறார்கள். பாராளுமன்றத்தேர்தலிலும், மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தலிலும் தமிழ்மக்கள் தமிழீழ லட்சியத்தை மீண்டும் வலியுறுத்தியதை எடுத்துக்காட்டுகிறது" என்றார்.

திரு. க. நடராசா தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில், இத்தேர்தலில் யாழ்.

[6-ம் பக்கம் பார்க்க]

## "தாவீது அடிகள்
# தமிழ் மொழிக்கு வாழ்வை அர்ப்பணித்து செயலாற்றினார்"
-- செல்வநாயகம்

[யாழ்ப்பாணம்]

'சர்வதேசப் புகழ்பெற்ற வண:பிதா தாவீது அடிகளார் 32 மொழிகளில் பாண்டித்தியம் பெற்றவர். இவர் தமிழ் மொழிக்கு தம் வாழ்வையே அர்ப்பணித்து தொண்டாற்றியவர் இலங்கையைப் பொறுத்தவரையில் இவரைப் போல் தமிழ் மொழியில் பாண்டித்தியம் பெற்றவர் கிடையாது.'

யாழ்ப்பாண மநகராட்சி மன்ற விசேஷ கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றபோது யாழ்ப்பாண பொதுசன நூலகம் தீயினால் நாசமாக்கப்பட்ட செய்திகேட்டு அதிர்ச்சி மரணத்துக்கான வண.பிதா தாவீது அடிகளாரைப் பற்றிய இரங்கலுரையின் போது மாநகரசபை அங்கத்தவர் திரு. ஜே. ஏ. செல்வநாயகம் பேசுகையில் குறிப்பிட்டார்,

யாழ். மாநகர முதல்வர் திரு. இராஜா விஸ்வநாதன் தலைமையில் நடைபெற்ற இவ் விசேஷ கூட்டததில் சபை உறுப்பினர் டாக்டர் ஏபிரகாம் பேசுகையில் கூறியதாவது:-

'தமிழ் மகனான வண.பிதா தாவீதடிகளின் இழப்பு தமிழினத்திற்குப் பேரிழப்பாகும் இலங்கையின் வரலாற்றில் தமிழ் மொழிக்கு தம் வாழ்வையே அர்ப்பணித்துத் தொண்டாற்றிய துறவிகளுள் இவரும் ஒருவராவார்' என்றார்.

திருமதி அந்தோனியா சுவாமிநாதர் இங்கு பேசுகையில் கூறியதாவது:-

'தாவீதடிகள் சுவாமி

[6-ம் பக்கம் பார்க்க]

புதிய, பழைய சினிமா பாடல்கள் பக்திப்பாடல்கள் யாவையும் ஸ்ரீரியோபோனிக் ஒலி அமைப்பில் ஒலிப்பதிவு செய்திட

## விக்ரர் அன் சன்ஸ்
### மியூசிக் சென்ரர்
100, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

தற்போது வெளியாகியுள்ள புதிய சினிமா பாடல்கள் கைவசமுண்டு தொடர்புகொள்க

# யாழ். அசம்பாவிதங்கள்: முழுப் பொறுப்பையும் அரசாங்கமே ஏற்கவேண்டும்

## யாழ். மாநகரசபை ஏகமனதாகத் தீர்மானம்

# பாராளுமன்ற முஸ்லிம்களின் மௌனம்குறித்துக் கவலை

## 'ஈழநாடு' பற்றி உறுப்பினர்கள்

(ஏ. வி. மாணிக்கம்)

''யாழ்ப்பாணத்தில் அண்மையில் நடைபெற்ற வன்செயல்களுக்கு முற்று முழுதான காரணமாகவிருந்ததாகக் கருதப்படும், தேர்தலுக்காக மேலதிகமாக வட பகுதிக்கு அனுப்பப்பட்ட பொலிசாரின் தாக்குதலினால் வீடுகள், கடைகள் உடைக்கப்பட்டும், தீ மூட்டப்பட்டும் கோடிக்கணக்கான பொருட் சேதங்களும், உயிர்ச் சேதங்களும் விளைவித்து, பொதுமக்களைப் பயத்துக்கும் பீதிக்கும் உள்ளாக்கிய இச் செயலுக்கு அரசாங்கத்தின் முன்னெச்சரிக்கையற்ற அசமந்தப்போக்கே காரணமெனவும், இதற்கான முழுப் பொறுப்பும் அரசாங்கத்தையே சார்ந்தது என்பதை அரசாங்கம் ஏற்க வேண்டுமெனவும், தற்சமயம் நடந்த வன்செயல் சம்பவத்தைச் சிறிதாகக் கருதித் தட்டிக்கழிக்கும் நோக்கோடும், இதுவரை பாராமுகமாகவிருக்கும் அரசாங்கத்தின் செயலை இச்சபை வன்மையாகக் கண்டிப்பதுடன் இது விடயம் தொடர்பான விசாரணையை சர்வதேச மன்னிப்புச் சபையே நடத்தவேண்டுமென ஜனாதிபதியையும், பிரதமரையும் கோருவதெனவும் தீர்மானிக்கின்றது.''

யாழ்ப்பாண மாநகர சபையின் விசேஷ பொதுக் கூட்டம் சபைமுதல்வர் திரு ராஜா விசுவநாதன் தலைமையில் நடைபெற்றபோது மாநகராட்சி மன்ற உறுப்பினர் திரு. ஆ. துரைராஜசிங்கம் மேற்படி தீர்மானத்தைப் பிரேரித்தார்.

அவர் தீர்மானத்தின் மீது பேசுகையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அசம்பாவித சம்பவங்களை விரிவாக எடுத்துக் கூறினார். அவர் பேசிக்கொண்டிருக்கையில் ஒரு கூட்டத்தில் தமிழர் கலை, கலாசாரம், பண்பாடுகளை ஒழிக்கவேண்டும் என்ற நோக்கத்துடனேயே இழக்கியாவின் தலைசிறந்து விளங்கிய யாழ். பொதுசன நூலகம் திட்டமிடப்பட்டு நாசமாக்கப்பட்டதென்று உணர்ச்சிவசப்பட்டுக் கூறினார். இந் நூல்நிலையம் திரும்பவும் சர்வதேச ரீதியிலோ ஜனாதிபதி நிதியிலிருந்தோ கட்டப்படவேண்டும் என்ற வேண்டுகோள்விடுத்தார்.

### ஜனநாயகம் கேலிக்கூத்தாகிவிட்டது

இப்பிரேரணைமீது டாக்டர் ஏபிரகாம் பேசுகையில் ''சட்டத்தைப்பாதுகாப்பது தான் ஜனநாயகம் ஆனால் ஆட்சியினர் தாங்கள் நினைத்ததுதான் சட்டம், தீர்ப்பு என்கிறார்கள் யாழ்ப்பாணத்தில் நடந்த சம்பவங்களை நேரில் வந்து பார்த்திருந்தால் நன்கு தெரியும்'' என்றார்.

''யாழ்ப்பாணத்தில் எரிந்த கடைகளில் குறையாடிய தமிழரின் நிலைமை குறித்து வெட்கப்படுவதாகவும் அவர் சொன்னார்.

''ஜனநாயக நாட்டில் தேர்தல் நடைபெறுவது முக்கியம் ஆனால் இங்கு ஜனநாயகம் ஒரு கேலிக்கூத்தாகிவிட்டது என்று கூறிய டாக்டர் ஏபிரகாம், யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபைத்தேர்தலின்போது வாக்குச் சாவடிகளில் நடந்த சீர்கேடுகள் குறித்தும் எடுத்துக் கூறினார். இங்கு நடைபெற்ற முழுச்சம்பவங்களுக்கும் அரசாங்கமும், ஜனாதிபதியுமே முழுப் பொறுப்பும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

### முஸ்லிம்கள் மௌனம் கவலையளிக்கிறது

சபை உறுப்பினர் ஜனாப். எம். எம். இமாம் பேசுகையில், யாழ் நகரில் நடைபெற்ற அசம்பாவித சம்பவங்களுக்கு அரசாங்கமே பொறுப்பு ஏற்க வேண்டும் இது அரசாங்கத்தின் திட்டமிடப்பட்ட செயல் என்றுதான் சொல்லவேண்டும் என்றார். இன்றைய பாராளுமன்றத்தில் ஒன்பதுக்கு மேற்பட்ட முஸ்லிம்கள் இருந்தும் அவர்கள் யாழ் மாவட்டத்தில் நடந்த அசம்பாவித சம்பவங்கள் பற்றி எந்தக் கருத்தும் தெரிவிக்காதது வேதனை அளிக்கிறது என்று கவலைப்பட்டார்.

### 'ஒரே குரலில் நாம்'

சபை உறுப்பினர் திரு. எம். மரியாம்பிள்ளை பேசுகையில் நாங்கள் இங்கு இருகட்சிகளாக இருந்தபோதும் எமது குரல்ஒரேகருத்துக்களையேஎடுத்துக் கூறுகிறது. எதிர்க்கட்சித் தலைவர் கொண்டுவந்த 5 அம்சக் கோரிக்கைகளை நாம் ஒரே குரலில் ஏற்கவேண்டும் இந்த அரசாங்கம் மீது எமக்கு நம்பிக்கையில்லை. சர்வதேச மன்னிப்புச்சபை மூலம் இப்பிரச்னைகளுக்கு தீர்வுகாணவேண்டும். இங்கு ஒன்றுபட்டது போல வருங்காலத்திலும் ஒன்றுபட்டு இயங்கி தமிழ் ஈழ் நாட்டைப் பெறவேண்டும் என்று ஆவேசமாகப் பேசினார்.

### விசாரணையில் அமைச்சர்களும் இடம்பெறவேண்டும்

ஜனாப் பாஷா முஹைதீன் பிச்சை பேசுகையில், யாழ்ப்பாணத்தில் அசம்பாவித சம்பவங்கள் நடைபெற்றபோது இங்கு நின்ற அமைச்சர்களும் இங்கு நடைபெறும் விசாரணையில் இடம்பெறவேண்டும் என்று கூறுறிர் இலங்கை ஈழ மக்கள் சார்பில் சர்வதேச மன்னிப்புச்சபைதான் விசாரணைகள் நடத்தவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

### தற்பாதுகாப்புப் படைவேண்டும்

திருமதி அந்தோனியா சுவாமிநாதர் உரையாற்றுகையில் யாழ்ப்பாணத்தில் தியணைக்கும் படை ஒன்று அவசியம் அமைக்கப்படுவதுடன் எமக்கென தற்பாதுகாப்புப் படை ஒன்றும் அமைக்க வேண்டும்'' என்றார்.

''ஈழநாடு' பத்திரிகைக் காரியாலயம் தீக்கிரையாக்கப்பட்ட சம்பவம் பற்றி அவர் கூறுகையில் 'ஈழநாடு' பத்திரிகை எந்த ஒரு கட்சிக்காகவும் உழைத்த பத்திரிகை அல்ல. அது பொதுவான ஏடு ஆனால் அப்பத்திரிகை ''ஈழநாடு' என்ற பெயரைப் பெறறதால் தான் இந்நிலையில் தாக்கப்பட்டது இன்று ஈழத்தில் ஏடு ஈழநாடு தாக்கப்பட்டதை யிட்டு யாழ்ப்பாணமும், நாமும் கண்ணீர் வடிக்கின்றோம்'' என்று கவலையுடன் கூறினார்.

மற்றும் உறுப்பினரான திரு எஸ். டி. செல்லத்துரை, திரு பேரின்பநாயகம் திரு யோ. அ. செல்வநாயகம், திரு தம்பு கந்தையா, எட்வேட் உட்பட பலர் மேற்படி தீர்மானத்தின்மீது உரையாற்றினர். தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (மா-அ)

---

## இ. காங்கிரஸ் அரசில்

# மக்கள் நம்பிக்கை

## இந்தியப்பிரதமர் பெருமிதம்

புதுடில்லி, ஜூன். 17

''இந்தியாவில் நடந்து முடிந்த இடைத்தேர்தல் முடிவுகள் இந்திரா காங்கிரஸ் அரசில் தொடர்ந்தும் மக்கள் நம்பிக்கை வைத்துள்ளார்கள் என்பதையே எடுத்துக்காட்டுகின்றது''

மேற்கண்டவாறு இந்திய பிரதம மந்திரிதிருமதி இந்திரா காந்தி நிருபர்கள் மகாநாட்டில் உரையாற்றுகையில் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

''இந்தியாவின் பொருளாதார தொழில்நுட்பவளர்ச்சிக்காக அனைத்து மக்களும் ஒன்று சேர்ந்து உழைக்க வேண்டும். எம்மிடையே ஏற்பட்டுள்ள வேறுபாடுகளை மறந்து எமது நாட்டின் முன்னேற்றத்தையே மக்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

''அயல்நாடுகளுடன் நட்புறவுடன் வாழவே இந்தியா விரும்புகிறது. சர்வதேச பிரச்னைகள் அனைத்தும் பேச்சுவார்த்தை மூலமே சமூகமான தீர்வு காணப்படவேண்டும்'' என்றார். (வெ

---

# சீனுவுக்கு அமெரிக்கா ஆயுதங்களை வழங்கும்

வாஷிங்டன், ஜூன். 17

சீனுவுக்கு இராணுவ ஆயுதங்களை விற்பனை செய்வதற்கு அமெரிக்கா சம்மதம் தெரிவித்துள்ளது.

அமெரிக்க வெளிநாட்டமைச்சர் டாக்டர் அலெக்சாண்டர் ஹெய்க்கின் 3நாள் சீன விஜயத்தின் பின்னரே அமெரிக்கா சீனுவுக்கு ஆயுதங்களை வழங்க முன்வந்துள்ளது.

சீனுவிற்கு இராணுவ ஆயுதங்களை விற்பனைசெய்வதின் மூலம் அமெரிக்க-சீன நல்லிணக்கத்தொடர்ந்தும் வலுப்படுத்த முடியுமென்றும் இந்த இராணுவ உதவியின் மூலம் சீன அமெரிக்காவின் நேசநாடாக ஆகிவிடாது என்றும் அமெரிக்க ஜனாதிபதிறேகனல்ட்றீகன் தெரிவித்தார்.

அமெரிக்காவுக்கு யுத்த ஆயுதங்களை விற்பனை செய்வதனுல் தாய்வானுடனான அமெரிக்க உறவு துண்டிக்கப்படமாட்டாதென்றும், தாய்வானுக்கும் அவசியம் ஏற்படும் பட்சத்தில் அமெரிக்கா இராணுவ ஆயுதங்களை விற்பனை செய்யத்தயங்காதென்றும் அவர் தெரிவித்தார். (இ)

---

# அரசியல் ரீதியில் தகுதியற்றவராம்

# பாணிசதரை பதவியிலிருந்து வெளியேற்ற பிரேரணை

## 120 எம்.பிக்கள் சமர்ப்பித்தனர்

தெஹ்ரான், ஜூன் 17

ஈரானிய ஜனாதிபதி ஜனாப் பானி சதரைப் பதவியிலிருந்து வெளியேற்றுவது தொடர்பான பிரேரணை ஒன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஜனாப் சதர் ஜனாதிபதி பதவிவகிப்பதற்கு அரசியல் ரீதியில் தகுதியற்றவர், எனவே அவர் பதவியிலிருந்து வெளியேற்றப் படவேண்டும் என்று தெரிவிக்கும் இப்பிரேரணையை 120 எம். பிக்கள் சமர்ப்பித்துள்ளனர்.

இப்பிரேரணை மீதான விவாதத்தின் 10 மணி நேரம் உரையாற்றுவதற்கு ஜனாப் சதருக்கு அவகாசம் அளிக்கப்படும் என்று சமபத்தலைவர் அயதொல்லா கொமெய்னி தெரிவித்துள்ளார்.

### வெடிவிபத்து

இதேவேளை ஜனாதிபதியின் இல்லத்தில் நேற்று வெடிவிபத்து ஒன்று ஏற்பட்டதாகவும் அதில் எவரது உயிருக்கும் ஆபத்து ஏற்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம் ஈரானின் கலவரங்களுக்குத் தூபமிட்டதான குற்றச்சாட்டின் பேரில் ஜனாதிபதியின் 8 உதவியாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். (இ)

---

# வண்ணை ஸ்ரீ கதிரேசனுக்கு லட்சார்ச்சனை

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் திருவண்ணை நகர் செந்தில் கதிர்வேலாயுத சுவாமி திருக்கோயில் தூர்மதி ஆண்டு லட்சார்ச்சனை இம் மாதம் 25ம் திகதி வியாழக்கிழமை நடைபெறவிருக்கிறது.

நேற்று புதன்கிழமை காலை சந்தனக்காப்புடன் ஆறுமுகார்ச்சனை ஆரம்பமாகி இம்மாதம் 24ம் திகதி புதன்கிழமை வரை நடைபெறும்.

25ம் திகதி காலை 9 மணிக்கு 1009, 109 சங்குகளால் அபிஷேகமும், லட்சார்ச்சனையும் நடைபெறும். நண்பகல் 'ஈழநாடு' நிறுவனத்தால் அன்னதானம் வழங்கப்படும். மாலை 5 மணிக்கு சுவாமி திருக்கல்யாணம், திருவூஞ்சலாகி திருவீதிஉலா நிகழும்.

காலநிலை- சூழ்நிலைகாரணமாக நீவ் வாண்டு எட்டுநாட்களுக்கு காலைமாலை இருவேளைகளிலும் தனித்தனி ஆறுமுக அர்ச்சனை செய்து லட்சார்ச்சனை நிறைவு செய்யவேண்டிய நிலைக்கு உள்ளாகி உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது (மா)

---

# உலக சனத்தொகை அதிகரித்தாலும் உணவுப் பிரச்னை ஏற்படாது!

நியூயோர்க் ஜூன், 17

உலகில் சனத்தொகை இன்னும் 130 ஆண்டுகளில் 1050 கோடியாக அதிகரிக்கவுள்ளதாக ஐ நா. ஸ்தாபனம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது

ஐ. நா. நிதிப்பிரிவு தலைவரினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

ஐ நா. நிதிப்பிரிவு தலைவரினால் வெளியிடப்பட்டுள்ள அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''உலகில் சனத்தொகை ஆண்டு தோறும் 8 கோடியாக அதிகரிக்கும், வளர்முக நாடுகளில் சனத்தொகையைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. ஆசியா ஆபிரிக்க நாடுகளிலேயே சனத்தொகை அதிகமாகவுள்ளது. இந்நாடுகளில் சனத்தொகை அதிகரிப்பைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படாவிட்டால் சமுதாய கொந்தளிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை இங்கு காணப்படுகின்றது.

''உலகசன நெருக்கடி காரணமாக நகரப்பகுதிகளில் பிரச்னைகள் அதிகரிக்கும் தென் காரணமாக அங்குள்ள மக்கள் கிராமங்களுக்கு படையெடுக்கும் ஆபத்துமுண்டு

''அடுத்த வருடம் உலக சனத்தொகை 440 கோடியாகும் உலகசனத்தொகை அதிகரிக்கின்ற போதிலும் உணவு விநியோகத்தில் பிரச்னை ஏற்படமாட்டாது தற்போதைய உணவு நெருக்கடிக்கு காரணம் சீரான உணவு விநியோக முறை இல்லாததேயாகும்''

## இப்படியும் நடக்கிறது

நேற்று முன்தினம் காலை நேரம் சுமார் ஏழரை மணி இருக்கும்.

அந்த வீட்டுக்குள் ஒரு பிரமுகர் நுழைகின்றார்... வாசல் படியில் கால் வைக்கும் அந்தச் சுஷணத்தில்...

''வாங்க... வாங்க...வலது காலை முன்வைத்து நுழையுங்க...'' என்றார் வீட்டுக்கார [பிரமுக]ர்.

வந்த பிரமுகரும் சிரித்துக்கொண்டே வலதுகாலை முன் வைத்தார்!

என்ன, குழப்பமா?

வந்த பிரமுகர் முன்னாள் செனட்டர் சு. நடராசா. வரவேற்றவர் கோடபாயின் வருங்கால எம். பி. திரு. மு. ஆலாலசுந்தரம்

யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலில் வெற்றிபெற்று, சபைத் தலைவராகிவிட்ட முன்னாள் செனட்டருக்கு 'அட்வான்ஸா'க வாழ்த்துக்கூறியவர்களில் 'ஆலால்' முந்திவிட்டார், அரசியலில் எல்லாம் நடக்கும். அது ஒரு மரபு!

ஃ ஃ ஃ

மகாவலித் திட்டத்துக்கு ஆஸ்திரேலிய அரசாங்கம் நிதிஉதவி வழங்க முன்வந்திருப்பதற்கு ஒருதிரைப்படம் தான் காரணம் என்பது உங்களுக்குத் தெரியுமா?

மாதுறு ஓயாவைப் பின்னணியாக வைத்து ஆஸ்திரேலிய குழுவொன்று ''ஜீவநதி'' எனும் பெயரில் விவரணப் படமொன்று [டொக்கியூமெண்டரி] தயாரித்தது. இப்படம் பின்னர் ஆஸ்திரேலியாவில் திரையிடப்பட்டபோது அரசின் பெரும் கவனத்தை ஈர்த்தது. முடிவு?

மாதுறு ஓயாதிட்டத்துக்கு 750 லட்சம் அமெரிக்க டாலர்களை ஆஸி அரசு வழங்க, அதுவும் நன்கொடையாக அளிக்க ''ஜீவநதி'' [றிவர் ஒப் லைப்] வழிவகுத்திருக்கிறது.

— ஊடுருவி


## நன்றி நவிலல்

திருப்பூர் மயிலிட்டி குழந்தைவேலு அருணாசலம் (விநாயகமூர்த்தி) அவர்களின் இறுதிச் சடங்கில் நேரிலும், அனுதாபச் செய்திகள் மூலமும் கலந்து எங்கள் இழப்பில் பங்கு கொண்ட அனைவருக்கும் எங்கள் நன்றியை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறோம் தனித் தனியே நன்றியைத் தெரிவிக்கமுடியாமைக்கு வருந்துகிறோம்.

அருணாசலத்தின் குடும்பத்தினர்
திருப்பூர், மயிலிட்டி.

0049

## உங்கள் முதலீட்டிற்கு 27% வட்டி

நாங்கள் வழங்குகின்றோம்

அத்துடன் உங்களுக்கு

★ ஆயுள் காப்புறுதி இனும்
★ வீட்டுப்பாவனைப் பொருட்கள்
(பணம் கொடுப்பனவு தவணை அடிப்படையில்)

நாம் உங்களுக்கு 41 வருடங்களாக சேவை செய்து வருகின்றோம்

என்பதை பெருமையுடன் கூறிக் கொள்ளுகின்றோம.

★ நம்பிக்கை
★ பாதுகாப்பு
★ ஸ்திரத்தன்மை

வடமாகாணத்திலேயே மிகக்கூடிய முதலீட்டாளரைக் கொண்ட ஒரேஒரு தனியார் துறை நிதி நிறுவனம்

த பினன்ஸ் கம்பனி லிமிடெட்,

191, 249, சி மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்

போன்: 7680


★ பாராளுமன்றத்தில் யோகேஸ்:

# 'என்கதை முடிந்தது என்று நான் நினைத்தேன்...'

(நமது சபை நிருபர் மாலி)

[நேற்றுமுன்தின தொடர்ச்சி]

அமிர்; தேர்தல் கடமைகளுக்காக வந்த பொலிஸாரே இத்தனை அட்டூழியங்களையும் புரிந்தார்கள்.

காமினி: ஜூன் முதலாந் தேதி யாழ்ப்பாணம் சென்ற பொலிஸ்மா அதிபரும் மற்றும் அதிகாரிகளும் அமைச்சா பெஸ்டஸ் பெரேராவும் யாழ். நிலைமைகளை ஆராய்ந்தார்கள். அதிகாரிகள் குழு ஜனாதிபதியிடம் மேலும் சில நடவடிக்கைகளுக்காக அவகாசம் கோரியதோடு தேர்தலை ஒத்திவைக்கவும் கோரியது. ஆனால் ஜனாதிபதி அதற்கு சம்மதிக்கவில்லை. குறித்த தினமே தேர்தலை நடத்த அவர் விரும்பினார். என்னை அழைத்து யாழ். செல்லும் படி பணித்தார் யாழ்ப்பாணத்துக்கு 200 பொலிசார் தேர்தல் கடமைகளுக்காக மேலதிகமாக அனுப்பப்பட்டிருந்தனர். எமது தலைமை வேட்பாளர் கலாநிதி தியாகராசா அங்கு சுட்டுக்கொல்லப்பட்டார். நாம் பெருமளவு வாக்குகளைப பெறுவோம் என்பதாலேயே அவர் சுடப்பட்டார்.

எம்.சிவா; நீங்கள் அங்கு கட்டுப்பணத்தையும் இழப்பீர்கள்.

காமினி: ஆம்; அதுசரி. அங்கு தமிழர் விடுதலைக்கூட்டணியைத் தவிர வேறு எவரும் அரசியல் நடத்தமுடியாது. அப்படியானவர்கள் அனைவருமே சுடப்படுகிறார்கள். தேர்தல்தினத்தன்று யாழ்ப்பாணக் கச்சேரி தேர்தல் உத்தியோகத்தர்களுக்கு உணவு வழங்கக்கூடியநிலையில் இருக்கவில்லை. அன்றைய தினம் யாழ்ப்பாணம் ஒரு வெறுந்தர நகரமாகவே காட்சியளித்தது. கடைகள் கொள்ளையடிக்கப்பட்டு எரிக்கப்பட்டிருந்தன. எதிர்க்கட்சித் தலைவர் இங்கு கூறியவற்றை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

எம். சிவா: இங்கு உள்ளவர்களுக்கும் அதைக் கூறுங்கள்.

காமினி; யார் செய்தார்களோ இவையெல்லாம் அங்கு நிகழ்ந்துள்ளன. சில பொலிசாரால் செய்யப்பட்டவை. நாம் அதை மறுக்கவில்லை. யாழ் உறுப்பினரின் வீடு, கூட்டணி தலைமைஅலுவலகம் என்பன சேதப்படுத்தப்பட்டதை எவரும் மறுக்கமுடியாது. நான் அங்கு எனது விடுமுறையைச் கழிக்கச் செல்லவில்லை. இச் சம்பவங்களை நடத்தவே நாம் அங்கு சென்றோம் என்றும் எவரும் கூறமுடியாது. பொலிசார் மீதான தொடர்ச்சியான கொலை பொலிசாரை ஆவேசம் கொள்ளவைத்தது.

யாழ்ப்பாணம் உறுப்பினர் திரு வெ. யோகேஸ்வரனின் குரல் அன்று வழமைக்கு மாறான —ஓர் அமைதியான தொனியில் ஒலித்தது. அதில் ஆணித்தரமும் இருந்தது. தனக்கு நேர்ந்த சம்பவங்களை திரு. யோகேஸ்வரன் சபையில் விளக்கிப் பேசினார். அவர் கூறியதாவது;

தமிழ்இனம் சரியான பாடத்தைப் படித்துவிட்டது. சரியான தீர்க்கமான ஒரு முடிவுக்கும் அது வந்துவிட்டது. நானும் நல்லதொரு பாடத்தைப் படித்திருக்கிறேன்.

### கடவுள் கிருபையால் உயிர் வாழ்கிறேன்

பிரதி சபாநாயகர் அவர்களே, கடவுள் கருணையால் நான் இன்று உயிரோடு வாழ்ந்து கொண்டிருக்கிறேன். 'கதை முடிந்தது' என்று நான் எண்ணியிருந்தபோது 'இல்லை, அது முடியவில்லை' என்று கடவுள் சொன்னார்.

இன்று இச்சபையில் நான் உரை நிகழ்த்துவேன் என்று 31ந் திகதி நான் நினைத்திருக்கவில்லை. என் மீதான அனுதாபத் தீர்மானம்தான் இன்று இச்சபையில் இடம்பெறும் என்று நான் எண்ணினேன்.

என்னுடைய சொந்தத் தொகுதியில், என்னைத் தங்களுடைய பிரதிநிதியாகத் தெரிவுசெய்த மக்களோடு, அவர்களது அன்பில் வாழ்ந்து கொண்டிருந்தவன் நான். அன்றைய தினம் 3 4, கூட்டங்களில் நான் பங்குபற்றினேன். கடைசிக் கூட்டம் தெல்லிப்பழையில் நடைபெற்றது. தை முடித்துக்கொண்டு வீடு திரும்பிய பின்னர் நாச்சிமார் கோவிலடியில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொள்வதற்காகப் புறப்பட்டேன். அக் கூட்டம் பொலிசார் விளைவித்த சில குழப்பங்களினால் இடைநிறுத்தப்பட்டுவிட்டதாகச் சிலர் தெரிவித்தார்கள். உடனே நான் வேறொரு கூட்டத்திற்குச் செல்லப் புறப்பட்டேன். அப்போது எனது மனைவி போகவேண்டாமென்று தடுத்தார்.

அவ்வேளை பெரியகடைப் பக்கமாக தீச்சுவாலை கிளம்பிக் கொண்டிருந்தது. அதைப் பார்த்ததும் 'எங்கள் வீட்டையும் தாக்கப்போகிறார்கள்' என்று மனைவி கூறினார். இல்லை இல்லை; நான் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஒரு பாராளுமன்ற உறுப்பினர்; வேண்டுமானால் வெளியில் நின்று ஏதாவது சத்தமிட்டு விட்டுச் செல்வார்கள் என்று எனது மனைவியிடம் கூறி விட்டு, தீச்சுவாலைபற்றி மாவட்ட அமைச்சருக்கும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கும் தொலைபேசியில் தெரிவித்தேன்

இவ்வேளை சபையின் பின் வரிசைகளிலிருந்து சிரிப்பொலிகள் எழுந்தன. அப்போது திரு.யோகேஸ்வரன் பிரதிசபாநாயகர் அவர்களே இவர்கள் சிரிக்கிறார்கள்; ஆனால் முழு உலகமும் இவர்களைப்பார்த் சிரிப்பது அவர்களுக்குத் தெரியவில்லை.'

### விடுதலைக்கு...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மாவட்ட மக்கள் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு அளித்த ஆதரவுக்குப் பாராட்டுத் தெரிவித்தார்.

மேலும் அவர் பேசுகையில், ''தமிழர்களின் உரிமைகளை வென்றெடுக்க, நல்ல சந்தர்ப்பம் ஒன்றை இத்தேர்தல் மூலம் மக்கள் வழங்கியுள்ளனர். நமது சேவைகளை நாம் திறம்படச் செயலாற்றுவோம்'' என்றார்.

திரு நடராசாவின் இல்லத்தின் முன்பாகவும், வெளியிலும் ஏராளமானோர் திரண்டிருந்தனர். [மா]

### ஜனாதிபதி....

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ராக நியமிக்கப்படுவர் என்றும் கூறப்படுகின்றது. நீதித்துறையில் ஈடுபட்டுள்ள ஓய்வுபெற்ற நீதியரசர்கள் சிலரின் பெயரையும் இவ்வட்டாரங்கள் இவ்வாணைக்குழுவில் இடம்பெறலாமென்று ஹேஸ்யம் தெரிவித்தன. [ம]

### தமிழ்மொழிக்கு..

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ஞானப்பிரகாசரின் வழிநின்று தமிழ் மொழிக்குத் தொண்டாற்றியவர். அவர் விட்டுச் சென்றபணியை தொடர்ந்து நடாத்த யாழ், மாநகர சபை நடவடிக்கை எடுக்கவேண்டும்'[ என்றார்.


## அறிவித்தல்

யாழ்.நகரில் சடந்த நாட்களில் நடந்த அசம்பாவிதங்களால் இலக்கம் 62A, கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள 'ரதி வாச் வேர்ச்ஸ்' [வேலைத்தலம்]ல் எதவித பாதிப்புகளும் ஏற்படவில்லை. எனவே வாடிக்கையாளர்கள் வழமைபோல் தங்கள் பணிக்கூட்டு திருத்த அலுவல்களைக் கவனித்துக்கொள்ளலாம்.

இப்படிக்கு
ரதி வாச் வேர்க்ஸ்
நிர்வாகத்தினர் 0047

## மரண அறிவித்தல்

### திருமதி கந்தையா பரமனாட்சி

புங்குடுதீவு இறுப்பிட்டியைச் சேர்ந்த கந்தையா பரமனாட்சி காலமாகிவிட்டார். இவர் சரணியசலை பிரபல வர்த்தகர் தம்பு கந்தையாவின் மனைவியும், மகேஸ்வரி, புவனேஸ்வரி, பரமேஸ்வரன் [லெட்சுமி விலாஸ் உரிமையாளர்] விக்னேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயாரும்; செல்லையா தம்பிப்பிள்ளையின் மாமியாரும், காலம் சென்ற ஆறுமுகம் குழந்தைவேலு, பொன்னையா, மரகதம் ஆகியோரின் சகோதரியுமாவார். அன்னாரது ஈமக்கிரியைகள். இன்று- [18-06-81] வியாழக்கிழமை காலை 10 மணியளவில், கேரதீவு மயானத்தில் நடைபெறும்.

0051


இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி 303ம் இலக்கத்திலுள்ள கலாநிலையம் அச்சகத்தில் 1981ம் ஆண்டு ஜூன் மாதம் 18-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as News Paper at the General Post Office, Sri Lanka
Regd No. QB 100 36/81 P. O. Box 49, Jaffna. தற்காலிக தொலைபேசி: 7707